**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை - அரசு மறுவாழ்வு இல்லங்கள் - தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை - காத்திருப்போர் பட்டியலில் உள்ள 2089 பயனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்க தேவைப்படும் நிதி ரூ.1,88,01,000/- செலவு செய்ய அனுமதி அளித்து - ஆணை- வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.1)த் துறை

அரசாணை (டி) எண் 28

நாள்: 04.10.2021
பிலவ, புரட்டாசி 18,
திருவள்ளுவர் ஆண்டு, 2052

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 66, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.2) துறை, நாள் 12.07.2013.
2. அரசாணை (டி) எண் 16, மாற்றுத் திறனாளிகள் நல (மாதிந-1)த் துறை, நாள் 27.05.2019.
3. மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் கடித ந.க. எண் 2914/ம.இ.நிர்/2021, நாள் 19.08.2021 மற்றும் 27.08.2021.

-----

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 2013-2014ஆம் நிதியாண்டிலிருந்து இத்திட்டத்திற்கென வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்குள் ஏற்கனவே பயன்பெறும் பயனாளிகளுக்கு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் மூலமாக ஒவ்வொரு மாதமும் மைய வங்கி முறையின் (Crore Banking System) கீழ் பராமரிப்பு உதவித் தொகை வழங்க, முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதியும், கூடுதலாக பயனாளிகள் கண்டறியப்பட்டால் இத்திட்டத்தின்கீழ் பராமரிப்பு உதவித் தொகை வழங்க வரவு-செலவு திட்டத்திற்கு மேலாக கூடுதல் நிதி ஒதுக்கீடு தேவைப்படின், அதற்குரிய கருத்துருவினை செப்டம்பர் மற்றும் பிப்ரவரி மாதங்களில் அரசுக்கு அனுப்பி வைக்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஏற்கனவே பராமரிப்பு உதவித் தொகை பெற்று வரும் தொழுநோயால் பாதிக்கப்பட்ட 7327 பயனாளிகள் உள்ள நிலையில், கூடுதலாக கண்டறியப்பட்ட 348 பயனாளிகளுக்கு பிப்ரவரி மற்றும்

(த.பி.பா.)

மார்ச் 2019 ஆகிய 2 மாதங்களுக்கு பராமரிப்பு உதவித் தொகையாக ரூ.10,44,000/- (ரூபாய் பத்து இலட்சத்து நாற்பத்தி நான்காயிரம் மட்டும்) கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்களிடமிருந்து 7675 தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் பயனடைந்து வருவதாகவும், மேலும், செப்டம்பர் 2019 முதல் செப்டம்பர் 2021 வரையிலான காலங்களில் 2089 தொழுநோயால் பாதிக்கப்பட்ட பயனாளிகள் காத்திருப்போர் பட்டியலில் இருப்பதாகவும், விவரங்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

| காத்திருப்போர் கண்டறியப்பட்ட ஆண்டு விவரம் | காத்திருப்போர் எண்ணிக்கை |
|---|---|
| செப்டம்பர் -2019 | 537 |
| பிப்ரவரி - 2020 | 344 |
| செப்டம்பர்-2020 | 458 |
| பிப்ரவரி-2021மற்றும் செப்டம்பர்-2021 | 750 |
| **மொத்தம்** | 2089 |

அதனடிப்படையில் கூடுதலாக கண்டறியப்பட்ட 2089 பயனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்குவதற்காக கீழ்கண்ட விகிதத்தில் கூடுதலாக ரூ.5,93,14,500/- (ரூபாய் ஐந்து கோடியே தொன்னூற்று மூன்று இலசட்சத்து பதினான்காயிரத்து ஐநூறு மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

| காத்திருப்போர் கண்டறியப்பட்ட ஆண்டு விவரம் | காத்திருப்போர் எண்ணிக்கை | மாதாந்திர பராமரிப்பு தொகை | நிலுவை மாதங்கள் | கூடுதலாக தேவைப்படும் தொகை |
|---|---|---|---|---|
| செப்டம்பர் -2019 | 537 | 1500 | 31 | ரூ. 2,49,70,500/- |
| பிப்ரவரி - 2020 | 344 | 1500 | 26 | ரூ. 1,34,16,000/- |
| செப்டம்பர்-2020 | 458 | 1500 | 19 | ரூ. 1,30,53,000/- |
| பிப்ரவரி-2021 மற்றும் செப்டம்பர்-2021 | 750 | 1500 | 7 | ரூ. 78,75,000/- |
| மொத்தம் | 2089 | | | ரூ. 5,93,14,500/- |

4. மேலே பத்தி-3ல் உள்ள மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரக அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த பயனாளிகளில் செப்டம்பர் 2019 முதல் செப்டம்பர் 2021 வரை காத்திருப்போர் பட்டியலில் உள்ள 2089 கூடுதல் பயனாளிகளுக்கு அக்டோபர் 2021

முதல் பராமரிப்பு உதவித் தொகை வழங்க தேவைப்படும் ரூ.1,88,01,000/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தெட்டு இலட்சத்து ஆயிரம் மட்டும்) நிதியை 2021-2022ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவு திட்ட மதிப்பீட்டிலிருந்து செலவு செய்ய அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி-4ல் செலவு செய்ய அனுமதி அளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 - சமூக பாதுகாப்பும் நலனும்-02 - சமூக நலன் 104 முதியோர், இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் - மாநில செலவினங்கள் - KQ - தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்குதல்-309 - உதவித் தொகை-03 - குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.

[IFHRMS த.தொ.கு 2235-02-104- KQ -30903]

6. இவ்வரசாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்43161/நிதி(சந)/2021, நாள் 04.10.2021ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். லால்வேனா
அரசு செயலாளர்

பெறுநர்
மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர், சென்னை-5.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.
மாநில கணக்காயர், சென்னை-18.
அனைத்து அரசு மறுவாழ்வு இல்லங்கள்.
(மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் வழியாக)
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை-9.

நகல்:
நிதித் (சந/வ.செ.பொ.II) துறை, சென்னை-9.
செயலரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
உதிரி நகல் / இருப்பு கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்